# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055









## மறைந்த பரிசுத்த பாப்பரசருக்கு அஞ்சலி செலுத்தினார் பேராயர்




### நாளைமறுதினம் இலங்கையில் துக்க தினம்

கொழும்பு, ஏப். 24

மறைந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் புகழுடலுக்கு இன்று வியாழக்கிழமை கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் அஞ்சலி செலுத்தினார்.

பாப்பரசர்தனது 88ஆவது வயதில்கடந்த திங்கட்கிழமை நித்திய இளைப்பாறுதல் அடைந்தார். 7

# கோட்டா விரைவில் கைது?



கொழும்பு, ஏப்.24

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மிக விரைவில் கைது செய்யப்படலாம் என வெளியான செய்தி அரசியல் வட்டாரங்களில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி மிக விரைவில் கைது செய்யப்படுவார் என்றும், அவர் முக்கிய அரசியல் பிரமுகர் என்றும் அநுர அரசின் உயர்மட்டத் தரப்பில் இருந்து அறியமுடிகின்றது. 7

## போதைப்பொருட்களுடன் 361 பேர் சிக்கினர்!



கொழும்பு, ஏப். 24

நாடளாவிய ரீதியில் நேற்று புதன்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப்பொருட்களுடன் 361 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

அதன்படி, ஹெரோயின் போதைப்பொருளுடன் 111 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 7

## உள்ளூராட்சி சபைத் தேர்தலையொட்டி பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிப்பு

கொழும்பு, ஏப். 24

எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள 2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் எதிர்வரும் 5 மற்றும் 6 ஆம் திகதிகளில் விடுமுறை வழங்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

விடுமுறை வழங்கப்பட்ட அனைத்து பாடசாலைகளும் வழமை போன்று எதிர்வரும் 7 ஆம் திகதி 7




## தபால் மூல வாக்களிப்பு ஆரம்பம்




கொழும்பு, ஏப். 24

உள்ளூராட்சி சபைத் தேர்தல் எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், தபால் மூல வாக்களிப்பு இன்று முதல் ஆரம்பமாகியுள்ளது என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தத் தபால் மூல வாக்களிப்பு நாளையும், எதிர்வரும் 28ஆம் மற்றும் 29ஆம் திகதிகளிலும், தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகம், 7

## புத்தளத்தில் நேற்று இரவு பெண் வேட்பாளர் கைது!

### சட்ட விதிமுறைகளை மீறி பிரசாரத்தில் ஈடுபட்டபோது

புத்தளம், ஏப். 24

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் பெண் வேட்பாளர் ஒருவர் 7



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# மூளையில் கிருமித் தொற்று குடும்பஸ்தர் உயிரிழப்பு



கொழும்பு,ஏப்.24


மூளையில் ஏற்பட்ட கிருமித் தொற்று காரணமாக இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்த சம்பவம் குடவத்தை, துன்னாலைப் பகுதியில் நேற்று (23) இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த மணியம் ஜெகதீஸ்வரன் (வயது 34) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்

குறித்த குடும்பஸ்தர் திடீர் உடல்நல குறைவு காரணமாக நேற்று புதன்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையை கொண்டு சென்ற போது அவர் அங்கு உயிரிழந்துள்ளார்.

பிரதேச பரிசோதனையில் மூளையில் ஏற்பட்ட கிருமித் தொற்று காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (ஐ)

# கண்டியில் ஸ்ரீ தலதா வழிபாடு விழாவுக்காக சிறப்பு அடையாள அட்டை!



கொழும்பு,ஏப்.24

கண்டியில் ஸ்ரீ தலதா வழிபாடு' விழாவிற்காக கூடியிருக்கும் பெருந்திரளான மக்களை நிர்வகிக்க, நேற்று முதல் சிறப்பு அடையாள அட்டை முறையை பொலிஸார் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இந்த நிகழ்வில் சுமார் 400,000 பக்தர்கள் கலந்து கொண்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் ஊடக சந்திப்பில் பேசிய மத்திய மாகாண மூத்த பொலிஸ் அதிபர் லலித் பத்திநாயக்க, வரிசைகள் மிக நீளமாக இருப்பதால், ஒரு நாளைக்கு 100,000 பேரை அனுமதித்தாலும் தற்போதைய எண்ணிக்கையை குறைக்க, குறைந்தது மூன்று நாட்கள் செல்லும் என்று தெரிவித்துள்ளார்.

கூட்டத்தை கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலை காரணமாக, இராணுவம் அழைக்கப்பட்டுள்ளது.

எனவே தான் அடுத்த இரண்டு நாட்களுக்கு கண்டிக்கு பயணிக்க வேண்டாம் என்று அதிகாரிகள் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், வரிசையில் இருந்த ஒருவர், நேற்று மாரடைப்பு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் காலமானார். (ஐ)



# தலைக்கவசத்துடன் நடமாடினால் அதிரடி சோதனை

கொழும்பு,ஏப்.24

பாதுகாப்பு தலைக்கவசம் அணிந்து சந்தேகத்திற்கிடமான முறையில் நடந்து கொள்ளும் நபர்கள் தொடர்பில் சோதனை செய்யப்பட வேண்டும் என பொலிஸ் தலைமையகம் அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தியுள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு பொலிஸ் தலைமையகம் இதனைத் தெரிவித்துள்ளது. மோட்டார் சைக்கிளில் செல்லும் போதே தலைக்கவசம் அணிவது கட்டாயம் என்றாலும், அது சாரதி மற்றும் பின்னால் அமர்ந்திருப்பவரின் பாதுகாப்பிற்காக மட்டுமே. எனவே, மோட்டார் சைக்கிளில் பயணிக்காத போது பாதுகாப்பு தலைக்கவசம் அணிந்து சந்தேகத்திற்கிடமான முறையில் நடந்துகொள்வது கண்டறியப்பட்டால், அந்த நபரையும் அவரது உடமைகளையும் ஆய்வு செய்யுமாறு அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் பொலிஸ் தலைமையகம் அறிவுறுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# 21,064 பேர் யாழ். மாவட்டத்தில் தபால் மூலமாக வாக்களிப்பதற்கு தகுதி

யாழ்ப்பாணம்,ஏப்.24

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 292 வாக்களிப்பு நிலையங்கள் தபால் மூல வாக்களிப்புக்காக அமைக்கப்பட்டுள்ள நிலையில் 21,064 பேர் யாழ். மாவட்டத்தில் தபால் மூலமாக வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளதாக யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் ஊடக சந்திப்பு ஒன்றினை ஏற்பாடு செய்து ஊடகங்களுக்கு கருத்தினை தெரிவிக்கும் போது அவர் இந்த தகவலை வழங்கினார்.

யாழ். மாவட்டத்தில்17 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் 243 வட்டாரங்களில் தேர்தல் நடைபெற இருக்கின்றது. யாழ் மாநகர சபை, மூன்று நகர சபைகள்,13 பிரதேச சபைகளுக்குமாக 17 சபைகளுக்கு இந்த தேர்தல் நடாத்தப்படவுள்ளது.

இந்த தேர்தலுக்காக 517 வாக்களிப்பு நிலையங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றது. மொத்த வாக்காளர் எண்ணிக்கையாக 4,98140 பேர் காணப்படுகின்றனர்.




இதேவேளை தபால் மூல வாக்களிப்பு நாளை மற்றும் நாளை மறுதினம் 24,25 மற்றும் 27,28 ஆம் திகதிகளில் அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் நடாத்தப்படவுள்ளது.

இதன்படி 292 வாக்களிப்பு நிலையங்களில் அஞ்சல் வாக்களிப்பு யாழ் மாவட்டத்தில் இடம்பெற காத்திருக்கின்றது. அதேவேளை வாக்களிப்பு கடமைகளுக்காக 292 அத்தாட்சி படுத்தல் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் 21ஆயிரத்து 64பேர் வாக்களிக்க அஞ்சல் வாக்களிப்புக்காக தகுதி பெற்றுள்ளனர். அஞ்சல் வாக்களிப்புக்காக விசேடமாக உதவி தெரிவத்தாட்சி அலுவலர்கள் பயிற்றுவிக்க பட்டுள்ளனர்.

மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக 28வலயங்கள் தெரிவுசெய்யப்பட்டு வலய செயற்பாடுகள் கையளிக்கப்பட்டுள்ளன. இதேவேளை மேற்பார்வை செயற்பாடுகளுக்காக 240உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் நீதியானதும் சுதந்திரமானதும் தேர்தல் நடாத்த நாம் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். நான்கு நாட்கள் இடம்பெறவுள்ள தபால் மூல வாக்களிப்பு யாழில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## பாடசாலை அனுமதியின் போதான அநீதிகள்: பிரதமர் அறிவிப்பு

கொழும்பு,ஏப்.24

மாணவர்களை பாடசாலைக்கு அனுமதிக்கும் போது ஏதேனும் அநீதி நடந்தால் கல்வி அமைச்சுக்கு அறிவிக்குமாறும் பிரதமர் ஹரிணி அமரசூரிய அறிவித்துள்ளார்.

தொடங்கொட பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் மற்றும் அதிபர்கள் ஆகியோர் பாடசாலை அனுமதிகளை பயன்படுத்தி பணம் சம்பாதிக்கும் காலம் முடிந்துவிட்டதாக பிரதமர் இதன்போது கூறியுள்ளார்.

அத்துடன், இந்த புதிய அரசியல் கலாசாரம் அனைத்து மட்டங்களிலும் நிகழ வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், ஜனாதிபதி, நாடாளுமன்றம், அமைச்சரவை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் மாற்றம் ஏற்படவில்லை என்றால் இதனை நடைமுறைக்கு கொண்டுவர முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

## வவுனியாவிற்கு விஜயம் செய்யவுள்ள ஜனாதிபதி அநுர



கொழும்பு,ஏப்.24

எதிர்வரும் 26ஆம் திகதி ஜனாதிபதி அனுர குமார திஸ ாநாயக்கா வவுனியாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

உள்ளூராட்சி தேர்தல் எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் வெற்றி நமதே ஊர் எமதே என்னும் தொனிப் பொருளில் தேசிய மக்கள் சக்தி தேர்தல் பரப்புரைக் கூட்டம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில், வவுனியா மாவட்டத்தில் உள்ள மாநகரசபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, செட்டிகுளம் பிரதேச சபை, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை என்பவற்றில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து வவுனியா நகரசபை மைதானத்தில் 26 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

குறித்த கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகவே ஜனாதிபதி வவுனியாவிற்கு வருகை தரவுள்ளார். (ஐ)

## அமைச்சர்களுக்கான வாகனங்கள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை



கொழும்பு,ஏப்.24

அமைச்சர்களுக்கு வழங்கப்படும் வாகனங்களின் எண்ணிக்கையை இரண்டாகக் கட்டுப்படுத்தியுள்ளதாக அரசாங்கம் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி, ஒரு அமைச்சருக்கு முன்னர் மூன்று வாகனங்கள் இருந்ததாகவும், தற்போது அது இரண்டாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மாதாந்த எரிபொருள் கொடுப்பனவை 2,250 லீற்றரிலிருந்து 900 லீற்றராகக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில் இது செயல்படுத்தப்பட்டதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பான சுற்றறிக்கை அறிவிப்பு ஜனாதிபதியின் செயலாளரால் வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)

## தபால் மூல வாக்களிப்புக்கான சகல பணிகளும் நிறைவு




கொழும்பு,ஏப்.24

உள்ளூராட்சி தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்கான சகல பணிகளும் நிறைவடைந்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சட்டத்தரணி எம்.பி.எம் .சுபியான் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்றுஇடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

"மட்டக்களப்பு மாவட்டத்தில் 12 உள்ளூராட்சி சபைகளில் இருந்து பட்டியல் வேட்பாளர்களுடன் சேர்த்து 274 பேர் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

வியாழக்கிழமை(24.04.2025) தொடக்கம் அனைத்து அரசு அலுவலகங்கள் பொலிஸ் நிலையங்கள் தபால்மூல வாக்களிப்பு இடம்பெற உள்ளத்துடன் ஆறாயிரத்துக்கு மேற்பட்ட அரச ஊழியர்கள் தேர்தல் கடமைகளுக்காக அமர்த்தப்பட உள்ளனர்.

மாவட்டத்தில் 447 வாக்களிப்பு நிலையங்களில் கிடைக்கப்பெறுகின்ற வாக்குகள் 144 வட்டார தேர்தல் வாக்குஎண்ணும்நிலையங்களுக்கு கொண்டுவரப்பட்டு என்னும் பணிகள் முன்னெடுக்கப்பட உள்ளன.

தபால் மூல வாக்கு எண்ணும் பணிகளுடன் இணைந்ததாக இறுதி தேர்தல் முடிவு வட்டார தேர்தல் எண்ணும் நிலையத்தில் இருந்து வெளியிடப்படும்" என தெரிவித்துள்ளார். (ஐ)

## பாடசாலை மாணவர்களுக்கு போசாக்கு உணவு வழங்கும் திட்டம்!

கொழும்பு,ஏப்.24

பாடசாலை மாணவர்களுக்கு போசாக்கு உணவு வழங்கும் திட்டத்தை தொடர்ந்தும் செயல்படுத்த அரசாங்கம் கொள்கை முடிவை எடுத்துள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமநாயக்க தெரிவித்துள்ளார்.

குறித்த திட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து பங்குதாரர்களுடனும் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். பாடசாலை மாணவர்களிடையே ஏற்படும் இரத்த சோகையை குறைக்கும் நோக்கில் இரும்புச்சத்து மற்றும் ஃபோலிக் அமிலத்துடன் தயாரிக்கப்படும் செறிவூட்டப்பட்ட அரிசி, பாடசாலை மாணவர்களின் மதிய உணவில் இந்த திட்டத்தின் கீழ் சேர்க்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கான போசாக்கு உணவு வழங்கும் திட்டம், உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் அமுல்படுத்தப்பட உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பரத் என்ற பெயரைக் கேட்டதும் கொக்கரித்த பயங்கரவாதிகள்!



"பெங்களூருவைச் சேர்ந்த தொழில்நுட்பப் பொறியாளர் பரத், பெருமையுடன் தன் பெயரை சொன்ன அந்த வினாடியே அவரை கொக்கரித்தபடி சுட்டுக்கொன்றனர் பயங்கரவாதிகள்" என்று அவரது மனைவி சுஜாதா கண்ணீருடன் கூறினார். காஷ்மீரில் நடந்த தாக்குதலில் மனைவி சுஜாதாவின் கண் முன்னே கொல்லப் பட்டவர் தான் பெங்களூருவத சேர்ந்த ஐ.டி., ஊழியர் பரத். இவர் வயது 35. இவரது மனைவி சுஜாதா குழந்தைகள் நல மருத்துவராக பணியாற்றி வருகிறார். இவர்களுக்கு 3 வயது மகன் உள்ளார். கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக தான் திருமணம் செய்து கொண்டனர். தாக்குதலுக்கு சில மணி நேரங்களுக்கு முன்பாக தான், பெங்களூருவில் உள்ள தனது தந்தைக்கு வீடியோ காலில் அழைத்து காஷ்மீரின் அழகை காண்பித்துள்ளார். தாக்குதலுக்கு 10 நிமிடங்கள் முன்பு தான் தன்னுடைய மகள் சுஜாதாவிற்கு தாயார் தொலைபேசியில் அழைத்து பேசியிருக்கிறார்.

தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளின் புகைப்படம் வெளியானது! முஸ்லிம் அல்லாதோரை குறிவைத்து தாக்கிய கொடூரம் உயிரிழந்த ஐ.டி., ஊழியர் பரத் அப்பா சென்னவீரப்பா கூறியதாவது: மகன் எனக்கு அழகான காட்சிகளை வீடியோ காலில் காண்பித்தார். நான் அவரைப் பாதுகாப்பாக இருக்கச் சொன்னேன். மகன் இறந்துவிட்டதாக எனது நண்பர்கள் தெரிவித்தனர். நான் அதை நம்பவில்லை. என் மூத்த மருமகளை டிவியை ஆன் செய்யச் சொன்னேன்.

ஆனால் சிக்னல் இல்லை. நான் செய்தி பார்க்க வேண்டும். டிவியை சரிசெய்யச் சொன்னேன். இன்டர்நெட் வேலை செய்யவில்லை என்று மருமகள் சொன்னாள். அவளுக்கு எல்லாம் தெரியும் ஆனால் சொல்லவில்லை. பயங்கரவாதிகள் குழந்தையை மருமகளிடம் ஒப்படைக்கச் சொல்லி இருக்கிறார்கள். பிறகு மகனுடைய பெயரைக் கேட்டுள்ளனர். அவன் 'பரத் பூஷன்' என்று சொன்னதும், அவன் ஹிந்துவா அல்லது முஸ்லிமா என்று கேட்டுள்ளனர். என் மகன் 'ஹிந்து' என்று பதிலளித்தபோது, அவரைச் சுட்டுக் கொன்றனர். நடிகர் பரத் பூஷன் மற்றும் மன்னர் பரத் ஆகியோரின் நினைவாக தான் மகனுக்கு பரத் என பெயர் வைத்தேன்". இவ்வாறு சென்னவீரப்பா அழுதுகொண்டே கூறினார். (ஐ)

# பயங்கரவாதத்தை இரும்பு கரத்துடன் கையாளுங்கள்: சத்குரு வலியுறுத்தல்



'பயங்கரவாதத்தை இரும்பு கரத்துடன், உறுதியான தீர்மானத்துடன் கையாள வேண்டும்' என, ஈஷா அறக்கட்டளை நிறுவனர் சத்குரு தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தின் நோக்கம் போர் அல்ல் ஒரு சமூகத்தை அச்சத்தால் முடக்குவது. பீதியை பரப்புவதும், சமூகத்தை பிளவுபடுத்துவதும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியை தடம் புரளச் செய்வதும், ஒவ்வொரு மட்டத்திலும் சட்டம் இன்மையை உருவாக்குவதுமே நோக்கமாகும்.

நம்தேசத்தின் இறையாண்மையை பாதுகாக்கவும், வளர்க்கவும் விரும்பினால், பயங்கரவாதத்தை இரும்பு கரத்துடன், உறுதியான, நீண்ட கால தீர்மானத்துடன் கையாள வேண்டும். கல்வி, பொருளாதாரம், சமூக நலன் என, அனைத்து மட்டங்களிலும் அனைவருக்கும் சம பங்கீடு வழங்குவது நீண்ட கால தீர்வை கொடுக்கும்.

மதம், ஜாதி அல்லது அரசியல் தொடர்புகள் ஆகியவற்றின் அனைத்து குறுகிய பிளவுகளுக்கும் அப்பால், ஒரு தேசமாக ஒன்றாக நிற்பதும், நமது பாதுகாப்பு படைகளுக்கு, அவர்களின் கடமையை செய்ய, அனைத்து மட்டங்களிலும் ஆதரவளிப்பதும் மிகவும் முக்கியமானது.

தாக்குதலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் மற்றும் காயமடைந்த அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கல். இவ்வாறு, சத்குரு பதிவிட்டுள்ளார். (ஐ)



# காஷ்மீரில் இருந்து பத்திரமாக தமிழகம் திரும்பிய சுற்றுலாப் பயணிகள் சொல்வது இதுதான்!

*ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாதிகள் திடீரென தாக்குதல் நிகழ்த்தியதில் 26 சுற்றுலாப் பயணிகள் இறந்த நிலையில், சுற்றுலா சென்ற தமிழர்கள் விமானம் மூலம் சென்னை விமான நிலையம் வந்தடைந்தனர். அவர்கள் விரைவாக மீட்புக்குழு அமைத்த முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்தனர்.*

*தமிழகம் திரும்பிய சுற்றுலா பயணிகள் சென்னையில் நிருபர்களுக்கு அளித்த பேட்டி: காஷ்மீர்னா இப்படி தான் இருக்குமா? எங்களுக்கு உயிர்பயமே வந்துடுச்சு. தமிழகத்தில் இந்த மாதிரி பிரச்னைலாம் இல்ல நிம்மதியா இருக்கோம்னு தோணுச்சு.*

*போகும் போது ரொம்ப சந்தோஷமாக தான் சென்றோம். எங்களுக்கு சென்னையில் இருந்து மதுரைக்கு செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் தமிழக அரசு செய்துள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். (ஐ)*

# சாலை பாதுகாப்பு நிதி ரூ.130 கோடியாக உயர்வு

*அரசு போக்குவரத்துக் கழகங்களின், 50 பஸ் பணிமனைகள், 75 கோடியில் ரூபாயில் புதுப்பிக்கப்படும். 4,000 பஸ்களில், 15 கோடி ரூபாய் செலவில், 360 டிகிரி வெளிப்புற கேமராக்கள் பொருத்தப்படும்*

*சாலை பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக, 500 பஸ்களில் இரண்டு கோடி ரூபாயில் ஓட்டுநர் கண்காணிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்படும்*

*சென்னையில் அயனாவரம், முகப்பேர், எம்.எம்.டி.ஏ., காலனி, திருவேற்காடு, பெசன்ட் நகர், கண்ணகி நகர் ஆகிய ஆறுபஸ் முனையங்கள், 7.5 கோடி ரூபாயில் மேம்படுத்தப்படும்*

*நுாறு பணிமனைகளில் பஸ்களை சுத்தம் செய்யத் தேவையான நவீன இயந்திரங்கள், கருவிகள், 10 கோடி ரூபாயில் வாங்கப்படும்*


*ஸ்ரீபெரும்புதுார் வட்டார போக்குவரத்து அலுவலகத்துக்கு, ஓட்டுநர் தேர்வு தளத்துடன் கூடிய கட்டடம், 7.27 கோடி ரூபாயில் கட்டப்படும்*

*திறன்மிகு ஓட்டுநர்களை உருவாக்கும் நோக்கத்தில், சேலம் தேவண்ணகவுண்டனுாரில், 17.25 கோடி ரூபாயில் ஓட்டுநர் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவனம் அமைக்கப்படும்*

*தமிழகத்தில் அதிக சாலை விபத்துகள் நடக்கும், 100 இடங்களை கண்டறிந்து, அங்கு சாலை மேம்பாட்டுப்பணிகள் மேற்கொள்ளப்படும்*

*சாலை விபத்துகளை தடுப்பதற்காக, 2025 – 26ம் ஆண்டுக்கான சாலை பாதுகாப்பு நிதி, 65 கோடி ரூபாயில் இருந்து, 130 கோடி ரூபாயாக உயர்த்தப்படும்.*

*இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.*



# பாகிஸ்தானுடன் உறவு துண்டிப்பு! தாக்குதலுக்கு தயாராகிறது இந்தியா?

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து, பாக்., உறவை துண்டித்துக் கொள்வதாக இந்தியா அறிவித்துள்ளது. சவுதி அரேபியா பயணத்தை பாதியில் முடித்துக் கொண்டு, கடும் கோபத்துடன் இந்தியா திரும்பிய பிரதமர் மோடி தலைமையில் நேற்று இரவு நடந்த மத்திய அமைச்சரவை பாதுகாப்பு குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:

இந்தியா -- பாக்., இடையே, 1960-ல் மேற்கொள்ளப்பட்ட சிந்து நதி நீர் ஒப்பந்தம் உடனடியாக ரத்து செய்யப்படுகிறது

பாக்., உடனான வாகா -- அட்டாரி எல்லை உடனடியாக மூடப்படுகிறது. பாகிஸ்தானைச் சேர்ந்த யாருக்கும், இந்தியாவில் பயணம் செய்ய அனுமதி கிடையாது. வாகா -- அட்டாரி எல்லை வழியாக பாகிஸ்தானியர்கள் யாராவது வந்திருந்தால், தகுந்த ஆவணங்களை காட்டி, மே 1ம் தேதிக்குள் திரும்ப வேண்டும்

'சார்க்' கூட்டமைப்பு நாடுகளுக்கான 'விசா விதி விலக்கு' பாகிஸ்தானுக்கு ரத்து செய்யப்படுகிறது. அந்த விசாவில் இந்தியாவில் இருக்கும் பாகிஸ்தானியர்கள் 48 மணி நேரத்துக்குள் வெளியேற வேண்டும்

டில்லியில் உள்ள பாக்., துாதரகம் செயலற்றதாக அறிவிக்கப்படுகிறது. அங்குள்ள ராணுவ, கடற்படை, விமானப்படையினர் உட்பட அனைத்து பாக்., அதிகாரிகளும் ஒரு வாரத்தில் வெளியேற வேண்டும்

பாக்., தலைநகர் இஸ்லாமாபாதில் உள்ள இந்திய துாதரகம் உடனடியாக மூடப்படுகிறது. அங்குள்ள ராணுவ, கடற்படை, விமானப்படை ஆலோசகர்கள் பதவிகள் ரத்து செய்யப்பட்டு, இந்திய அதிகாரிகள் அனைவரும் நாடு திரும்ப உத்தரவிடப்படுகிறது. (ஐ)

# பரிதல்கள்



பழமையைப் போற்றுவதாகவும், இயற்கை வழியில் பயணிப்பதாகவும் சொல்லிக் கொண்டு இருக்கும் போக்கைப் பற்றி ஆராய்ந்தறிவது அவசியம். ஒரு குறிப்பிட்ட செயல்முறையையோ அல்லது சமூகத்தையோ இயற்கைக்கு எதிரானது என்று சொல்பவர்களுக்கு ஒரு கேள்வி. இயற்கை என்றால் என்ன, அதன் சிறப்பம்சங்கள் யாது? மனிதன் வரையறுக்கப்பட்ட விதிகளுக்குள் அடங்குவது மட்டுமே இயற்கை கிடையாது. இயற்கை என்பது மனித அறிவுக்கு அப்பாற்பட்டது. அதில் எதுவும் சாத்தியம். இங்கு பால்புதுமையினருக்கோ, தன்பாலீர்ப்பாளர்களுக்கோ கிடைக்கப்பட வேண்டிய உரிமையும் அங்கீகாரமும் கிடைக்காமல் போனதற்கு, இந்த மரபுசார் மனநிலைதான் காரணம். இயற்கையை வெறும் பால்சார் பண்புகளுக்குள் மட்டுமே அடக்கிவிட முடியாது. அறிவியலாளர் நாராயணி சுப்ரமணியன் எழுதிய 'விலங்குகளும்பாலினமும்' நூலில், பால்வகைமைகளைப் பற்றியும், பரிணாம வளர்ச்சி பற்றியும் தெளிவாகக் கூறியுள்ளார். தன்பாலீர்ப்பு என்பது விலங்குகளிடம் காணப்படுகிற ஒரு பண்பு. இதற்குப் பரிணாமத்தில்



நீண்ட நெடிய வரலாறு உண்டு. மனிதர்களுக்குள் தன்பாலீர்ப்பு பண்பு ஆதிகாலம் தொட்டே இருந்திருக்கிறது. கிரேக்கம், ரோமானியம், இந்தியா, அமெரிக்கா, எகிப்து, இங்கிலாந்து, ஆபிரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட அனைத்து நாகரிகத்திலுமே தன்பாலீர்ப்பாளர்கள் இருந்ததாக ஆய்வுகளும் கூறுகின்றன. அதுவும் குறிப்பாக கிரேக்க ரோமானிய மக்களிடம், வயது முதிர்ந்த ஆணுக்கும் இளம் வயது ஆணுக்கும் இடையே உறவு இருந்ததாக இலக்கியங்களில் சொல்லப்படுகிறது. அந்த உறவுக்கு 'நெனநசயளவல என்று பெயர்.

மனிதன் வகுத்து வைத்திருக்கிற ஆண் பெண் என்கிற இருபால் வகைமைகளுக்குள் மட்டும் அத்தனை உயிரினங்களையும் வரையறுத்துவிட முடியாது. பால் சார்ந்த ஏற்ற இறக்கங்களை இயற்கையோடு ஒப்பிட்டு அதன் மூலம் நடத்தப்படும் ஒடுக்குமுறை அபத்தமானது.

இதுபோன்ற ஆபத்தான மனநிலைகளில்தான் பால் சார் சுரண்டல்களும் நடத்தப்படுகின்றன. அதற்கு உதாரணமாகப் பெண்ணுடல் மீது நடத்தப்படும் அத்தனை அத்துமீறல்களையும் சொல்லலாம். கருத்தரிப்பு தொடங்கி, கருத்தடை வரையிலான சட்டங்களுக்குப் பின்னால் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் இல்லாமல் இருப்பதும் இந்த ஒருதலைப்பட்சமாக நடத்தப்படும் அரசியலால்தான். இந்தத் தொடர் முழுக்கப் பேசப்பட்ட பல அறிவியல் மற்றும் சமூகம் சார்ந்த கருத்துகள் யாவும் மனிதன் தன்னை இந்த உலகின் முதன்மை உயிராக நிலைநாட்டிக் கொள்ளவும், தன் இனத்தை வலுப்படுத்திக் கொள்ளவும் மேற்கொண்ட உக்திகள்தாம்.

மரபியலையும் சூழலியலையும் தனித்தனியாகப் பிரித்துப் பார்ப்பது அர்த்தமற்றது. சூழல் மாற்றத்திற்கேற்ப நடந்த மரபணு மாற்றங்கள்தாம் பரிணாம வளர்ச்சியின் ஒற்றை வரி விளக்கம். ஒரு செல் உயிரியிலிருந்து மனிதன் வரை நடந்த பரிணாம வளர்ச்சியில், புறச்சூழலின் ஆற்றலை முழுமையாகச் சுரண்டிக் கொண்டது மனிதன்தான் என்றால் அது மிகையாகாது. மற்ற உயிர்கள் அனைத்தும் தன்னையும் தன் சந்ததிகளையும் இவ்வுலகில் நிலைநாட்டிக் கொள்வதை மட்டுமே வாழ்நாள் கடமையாகக் கொண்டுள்ளன். ஆனால், மனிதன் மட்டுமே இவ்வுலகின் மீது ஆதிக்கம் செலுத்த விரும்புகிறான்.

மனித மூளைக்கு எட்டியதை மட்டுமே வைத்து இயற்கைக்கு எதிரானது அல்லது புறம்பானது என்று முத்திரைக் குத்திக் கொண்டு அடக்குமுறை செலுத்துவது ஒருபுறம் என்றால், இன்னொரு புறம் 'இயற்கையை நோக்கி நகர்கிறேன்' என்று தவறான மருத்துவ சிகிச்சை முறையில் சிக்கிக் கொள்பவர்களும் இருக்கிறார்கள். சமீபத்தில்கூட மஞ்சள்காமாலை, புற்றுநோய் போன்ற நோய்களை குணமாக்க நாட்டு மருந்து தருவதாகச் சொல்லி நடந்துவரும் மோசடிகளை நாடெங்கும் செய்திகளில் பார்த்த வண்ணம்தான் இருக்கிறோம்.

உறவினர் ஒருவருக்குப் பல மாதங்களாக வறட்டு இருமல் இருந்திருக்கிறது. அவரும் ஒரு மருத்துவரை அணுகி மருந்து மாத்திரைகளை உட்கொண்டார். ஆனால், இருமல் நின்றபாடில்லை. வேறொரு மருத்துவரை அணுகியும், அவர் கொடுத்த மாத்திரைகளும் இருமலைச் சரி செய்யவில்லை. இப்படிப் பல மருத்துவர்கள், பல மருந்துகள் மாத்திரைகள். ஆனாலும் இருமல் குணமாகவில்லை. கடைசியாக ஒரு மருத்துவர் பரிசோதித்துப் பார்த்துவிட்டு இது புற்றுநோயின் அறிகுறியாக இருப்பதற்கான வாய்ப்பு உண்டு என்று கண்டறிந்துள்ளார். பிறகு, பரிசோதித்துப் பார்த்ததில் தொண்டையில் புற்றுநோய் கட்டி இருந்திருக்கிறது. அதுவும் நான்காம் நிலை புற்றுநோய். தொடர் சிகிச்சைக்குப் பிறகும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. இது போல நிறைய செய்திகளைத் தினமும் கடந்து வருகிறோம். உடலில் நீண்ட நாட்களாக இருந்து வரும் ஓர் அறிகுறியை அலட்சியப்படுத்துவதுதான் இங்கு பல நோய்களைத் தீவிரமாக்குகிறது.

தெரிந்தவர் ஒருவருடைய மனைவிக்குப் புற்றுநோய் இருந்தது. இயற்கை மருத்துவத்தில் குணமாகிவிடும் என்று நம்பி, அவர்கள் கொடுத்த மருந்தைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தார். ஆனால், நாளடைவில் நோயின் தீவிரம் அதிகமாகிக் கொண்டே போனது. ஒருகட்டத்தில் நோய் மற்ற உறுப்புகளுக்குப் பரவ ஆரம்பித்து, அவர் படுத்தபடுக்கையாகி விட்டார். கொஞ்ச நாட்களிலேயே அவரை இழந்துவிட்டோம். இங்கு பலரிடம் இருக்கும் சிக்கல் என்னவென்றால், இயற்கை வழி மருத்துவம் என்கி வார்த்தையால் எளிதில் ஈர்க்கப்படுகிறார்கள்.

கரோனா காலத்தில்கூட நிலவேம்பு கசாயம் குடித்துவிட்டு, எனக்கு கரோனா வராது என்று உறுதியாகச் சொன்னவர்களையும் எனக்குத் தெரியும். உண்மையில், நிலவேம்பு கஷாயம் என்பது உடலின் ஒட்டுமொத்த நோய் எதிர்ப்பு மண்டலத்தையும் பொதுவாக வலுவூட்டக் கூடிய ஆற்றலுடையது. ஆனால், குறிப்பிட்ட ஒரு நோயை எதிர்த்துப் போராடக்கூடிய ஆற்றல் அதற்குண்டா என்று கேட்டால் அது கேள்விக்குறிதான். இது ஒரு முன்னெச்சரிக்கை வழிமுறையாக இருக்குமே தவிர,



நோய் வந்த பிறகு நோய்க்கான சிகிச்சையை மேற்கொள்வது தான் புத்திசாலித்தனம்.

நோய் வருவதற்கு முன்னால் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கையை எடுக்கலாம். ஆனால், வந்த பிறகு நோயின் தீவிரத்தைத் தெரிந்து கொண்டு சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும். மஞ்சள்காமாலைக்கு எங்கோ ஓர் இடத்தில் இயற்கை வழியில் மருத்துவம் அளிப்பதாகச் சொல்லி, அதுவும் மூன்றே



நாட்களில் குணமடைந்துவிடலாம் என்று மக்களைக் கவர்ந்து வரும் சில போலியான மருந்துகளைப் பயன்படுத்தி பாதிக்கப்பட்டவர்கள் ஏராளம். மஞ்சள்காமாலை முற்றிய நிலையில் கல்லீரல் அழற்சிஃகல்லீரல் கரணைநோயாக (டளைநச உசைசாழளளை) மாறி, இறுதியில் அது புற்றுநோயாக உருமாறுவதற்கான வாய்ப்பு உண்டு.

ஆயுர்வேத மருத்துவத்தைத் தொடர்ந்து எடுத்து வந்த 58 வயதான அமெரிக்கப் பெண்மணியின் உடலில் ஈயத்தின் (டநயன) அளவு கூடுதலாக இருந்ததாகவும், அதனைத் தொடர்ந்து சில தீவிரமான பக்கவிளைவுகள் இருந்ததாக 2011இல் வெளியான ஓர் ஆராய்ச்சி கட்டுரை கூறுகிறது. எந்தச் சிகிச்சை முறை சிறந்தது என்பதைப் பற்றி விவாதிப்பதற்காக இதை எழுதவில்லை. எந்த ஒரு சிகிச்சை முறையைப் பின்பற்றினாலும், நோயின் தன்மையையும் அதன் தீவிரத்தையும் அறிந்து உரிய மருத்துவ சிகிச்சை முறையைத் தேர்ந்தெடுப்பது அவசியம். எந்த மருத்துவ முறையாக இருந்தாலும் அதைப் பற்றிய கொஞ்சம் அறிவையாவது பெற்றிருப்பது, அதனால் ஏற்படும் பக்கவிளைவுகளைச் சமாளிக்க உதவும்.

இயற்கை என்னும் பரவலான வார்த்தையை நமக்கேற்றவாறு பயன்படுத்திக் கொள்வதென்பது குறிகிய மனநிலையை உருவாக்கும். சமீபத்தில் வெளியான ஆய்வு ஒன்றில், பல்லாயிரக்கணக்கான நூற்றாண்டுகளாக மனிதர்களின் லு குரோமோசோம்கள் அளவில் சுருங்கிக் கொண்டே வருகின்றன என்பதைக் கண்டறிந்துள்ளனர். இதற்கான காரணமாகச் சொல்லப்படுவது லு குரோமோசோம் இணையில்லாமல் ஒற்றையாக இருப்பதால், அதில் ஏற்படும் பிறழ்வுகளை எளிதில் சரிசெய்ய முடிவதில்லை என்பதுதான். இது பரிணாம வளர்ச்சியின் ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது. மனிதனின் அடுத்த பரிணாமம் என்னவாக இருக்கும் என்பதற்கான ஆய்வுகள் நடந்து வந்தாலும், அடுத்து என்ன நடக்கப் போகிறது என்பதை அறிந்தது இயற்கை மட்டும்தான். மனிதனின் அறிவாற்றல் இன்னும் இயற்கையை நிர்ணயிக்கும் அளவிற்கு விரிவடையவில்லை என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நீண்ட நாள் வாழும் ஆசையில், மனிதன் தன் ஆயுளை நீட்டிக் கொள்வதற்காகப் பல தொழில்நுட்பங்களையும், சிகிச்சை முறைகளையும் பயன்படுத்தி வருகிறான். ஆனால், இயற்கை இவை எதையும் சட்டை செய்யாமல் தன் வேலையைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது.

# காசா பள்ளிக்கூடத்தின் மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல் - 23 பேர் பலி






இஸ்ரேல் இடையேயான போர் ஒப்பந்தம் காலாவதியான நிலையில் காசா மீது இஸ்ரேல் ராணுவம் மீண்டும் போர் தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது.

பணயகைதிகளை மீட்கவும், ஹமாஸ் ஆயுத குழுவினரை முழுவதுமாக அழிக்கும் நோக்கிலும் இஸ்ரேல் ராணுவம் சரமாரி தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.

2 ஆண்டுகளாக நீடித்து வரும் இந்த போரில் இதுவரை 50 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர். இந்தநிலையில் நேற்றும் இஸ்ரேல் ராணுவம காசா மீது அதிபயங்கர தாக்குதலில் ஈடுபட்டது. காசாவின் ராபா பகுதியை நோக்கி குறிவைத்து நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் அங்குள்ள இஸ்லாமிய பள்ளிக்கூடம் உள்பட அப்பகுதி கட்டிடங்கள் தீப்பிடித்து இடிந்து விழுந்தன. இந்த கோர தாக்குதலில் 23 பேர் உயிரிழந்தனர். (ஐ)



## டிரம்ப் நிர்வாகத்தில் இருந்து எலான் மஸ்க் விலகல்

அமெரிக்க ஜனாதிபதியாக டிரம்ப் பதவியேற்றதை தொடர்ந்து அரசு நிர்வாக செலவுகளை குறைப்பதற்காக 'டாட்ஜ்' என்னும் புதிய துறை உருவாக்கப்பட்டது. அதன் செயல் தலைவராக உலக பணக்காரர்களில் ஒருவரும் 'டெஸ்லா' நிறுவன அதிபருமான எலான் மஸ்க் பொறுப்பு வகித்து வந்தார். தொடர்ந்து நிர்வாகத்தில் மாற்றங்கள் கொண்டு வரும் விதமாக பல அதிரடி முடிவுகளை மேற்கொண்டார்.

அரசு ஊழியர்கள் பணியைவிட்டு நீக்குதல், அரசு செலவுகளை குறைத்தல் உள்ளிட்டவற்றில் மஸ்க் தலைமையிலான 'டாட்ஜ்' துறை தீவிரமாக ஈடுபட்டது. இதனால் அரசுக்கு ஒருநாள் செலவில் இருந்து ரூ.34 ஆயிரம் கோடி வரை குறைக்கப்பட்டது. இந்தநிலையில் டிரம்புடன் இணைந்து கொண்டு எலான் மஸ்க் செயல்படுவதால் அவருடைய டெஸ்லா நிறுவனம் உள்ளிட்டவற்றின் பங்குகள் மதிப்பு குறைய தொடங்கின. நேற்று முன்தினம் ஒரேநாளில் 20 சதவீதம்வரை டெஸ்லாவின் லாபம் குறைந்தது. இந்தநிலையில் டிரம்ப் நிர்வாகத்தின் கீழ் செயல்படும் டாட்ஜ் துறைக்கு நேரம் ஒதுக்குவதை குறைத்து கொள்ள இருப்பதாக எலான் மஸ்க் தெரிவித்துள்ளார். இதனால் டெஸ்லா வளர்ச்சிக்கு பங்காற்ற முடியும் என்றார். அடுத்த மாதத்துக்குள் (மே) டிரம்ப் நிர்வாகத்தில் இருந்து முழுவதுமாக வெளியேறிவிடுவேன் எனவும் சூசகமாக தெரிவித்துள்ளார்.

## எந்த நேரமும் இந்தியா தாக்குதல் நடத்தும் வாய்ப்பு அச்சத்தில் பாகிஸ்தான்



சர்ஜிக்கல் ஸ்டிரைக் நடவடிக்கையை எந்நேரத்திலும் இந்தியா மேற்கொள்ளக்கூடும் என்ற அச்சம் காரணமாக பாகிஸ்தான் விமானப்படையை தயார்நிலையில்வைத்துள்ளதாக தகவல்கள்வெளியாகி உள்ளன.

தீவிரவாதிகளின் பஹல்காம் தாக்குதல் எழுப்பிய அதிர்வலைகள் நாடு முழுவதும் இன்னமும் ஓயவில்லை. 26 பேரை சுட்டுக் கொன்ற பயங்கரவாதிகளுக்கு எதிராக கடும்நடவடிக்கை என்ற ஒற்றை புள்ளியில் மத்திய அரசும், அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்று சேர்ந்துள்ளன.

அதே சமயத்தில் இந்தியாவின் அடுத்தக்கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும் என்ற பாகிஸ்தானும் உற்றுநோக்க ஆரம்பித்துள்ளது. நிச்சயம் பதிலடி உண்டு என்று உறுதியான குரல்கள் எழு தொடங்கி உள்ள நிலையில், பாகிஸ்தான் தனது தரப்பு நடவடிக்கையை மேற்கொள்ள ஆயத்தமாகி இருக்கிறது.

பஹல்காம் தாக்குதலுக்கு நமது அரசு நிச்சயம் பதிலடி கொடுக்கும்: அண்ணாமலை

இந்த பயங்கரவாத தாக்குதலுக்கு பாகிஸ்தானை தளமாக கொண்ட ஐஎஸ்ஐ இயக்கத்தின் கிளை அமைப்பான தி ரெசிஸ்டன்ஸ் ப்ரண்ட் பொறுப்பேற்றுள்ளது. அதன் விளைவாக இந்தியாவின் தரப்பில் இருந்து எப்படியும் சர்ஜிக்கல் ஸ்டிரைக் தாக்குதல்(இது ஒரு ராணுவ தாக்குதல், இலக்கை மட்டுமே குறிவைத்து தாக்கும் நடவடிக்கை) இருக்கலாம் என்பதால் அதை எதிர்கொள்ள பாகிஸ்தான் தயாராகி வருவதாக தெரிகிறது.

அதற்காக, தமது விமானப்படை விமானங்களை பாகிஸ்தான் தயார் நிலையில் வைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

எல்லையோர கிராமங்களையும் காலி செய்துள்ளது. ராணுவத்தையும், ஐஎஸ்ஐ-யையும் உஷார் நிலையில் வைத்து இருக்கிறது.

அசாதாரணமான நடமாட்டத்தை பாகிஸ்தான் கண்டறிந்துள்ளதாகவும், வான்வழித் தாக்குதல் நடவடிக்கைகள் இருக்கலாம் என்றும், பாக். அதற்கு அஞ்சுவதாகவும் அங்கிருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ)

## ஏப்ரல் 24 ஸ்ரீ சத்ய சாய்பாபா நூற்றாண்டு விழா தினம் பிரகடனம் செய்தது நியூயார்க் நகரம்!

பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் உலகளாவிய சேவை, சமுதாய நலப்பணிகள், கருணை, அமைதிப் பணிகளை கவுரவிக்கும் வகையில், நியூயார்க் நகரம் சிறப்பு பிரகடனம் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் நியூயார்க் நகர மேயர் எரிக் ஆதம்ஸ், ஏப்ரல் 24ம் தேதியை ஸ்ரீசத்ய சாய்பாபா நூற்றாண்டு கொண்டாட்ட தினமாக பிரகடனம் செய்தார்.

பிரகடன அறிவிப்பை, மேயர் அலுவலக பிரதிநிதிகள் முன்னிலையில் துணை




கமிஷனர் திலீப் சவுகான் வெளியிட்டார்.

இதன் மூலம் உலக அளவில், இத்தகைய அறிவிப்பை வெளியிட்ட முதல் அரசு கவுன்சில் நிர்வாகம் என்ற பெருமையை நியூயார்க் நகரம் பெற்றது. இந்த நிகழ்ச்சியில் சத்ய சாய் குளோபல் கவுன்சில் உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் பிரசாந்தி நிலையம், ஸ்ரீசத்ய சாய் மீடியா சென்டர் மூலம் தயாரிக்கப்பட்ட பகவான் ஸ்ரீசத்ய சாய்பாபா குறித்த ஆவணப்படம் திரையிடப்பட்டது.

ஸ்ரீ சத்ய சாய் மத்திய அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் ஆர்.ஜே. ரத்னாகர், அறிக்கை வாசித்தார்.

மனிதாபிமான அடிப்படையில் உலகம் முழுவதும் ஸ்ரீசத்ய சாய் பக்தர்கள் மேற்கொண்ட நற்பணிகள் குறித்து இந்த ஆவணப்படம் தயாரிக்கப்பட்டிருந்தது. (ஐ)

## புத்தளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேர்தல் துண்டுப்பிரசுரங்களுடன் புத்தளம் பொலிஸாரால் நேற்று புதன்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி பெண் வேட்பாளர் புத்தளம் - தில்லடி பிரதேசத்தில் வசிக்கும் 61 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சட்ட விதிமுறைகளை மீறி தேர்தல் துண்டுப்பிரசுரங்களுடன் மக்களின் வீடுகளுக்குச் சென்று பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டபோதே இந்தப் பெண் கைது செய்யப்பட்டார் எனவும், அவரிடமிருந்து 86 தேர்தல் துண்டுப்பிரசுரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## போதைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

167 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 82 பேரும், சட்டவிரோத சிகரெட்டுகளுடன் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கை நாடு முழுவதும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தபால்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸ் திணைக்களம், மாவட்ட செயலகங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களில் இடம்பெறும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்த ஆண்டு 6 இலட்சத்து 48 ஆயிரத்து 495 விண்ணப்பதாரர்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

## மறைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாப்பரசரின் புகழுடல் பொது மக்கள் அஞ்சலிக்காக அரச மரியாதையுடன் வத்திகானிலுள்ள சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. நாளைமறுதினம் சனிக்கிழமை பாப்பரசரின் இறுதிக்கிரியைகள் நடைபெறவுள்ளன. இதேவேளை, பாப்பரசரின் இறுதிக்கிரியைகள் நடைபெறும் தினமான நாளைமறுதினம் 26ஆம் திகதியை இலங்கையில் தேசிய துக்க தினமாக அரசு அறிவித்துள்ளது.

எனவே, நாளைமறுதினம் சனிக்கிழமை சகல அரச நிறுவனங்களிலும் தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விடுமாறும் அரசால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## கோட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன் அந்தப் பிரதான சூத்திரதாரிக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது.

இந்தக் கைது நடவடிக்கைக்கு எதிராக தென்னிலங்கையில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டால் பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படைகளைக் கொண்டு அவற்றைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அறியமுடிகின்றது.

நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றவே 2019 ஆம் ஆண்டில் ஒரு தரப்பால் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கடந்த சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திதாரி என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்படவுள்ள முக்கிய அரசியல் பிரமுகர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மீண்டும் ஆரம்பிக்கப்படும். வாக்கெடுப்பு நிலையங்களாகப் பயன்படுத்தப்படவுள்ள பாடசாலைகளை எதிர்வரும் 4 ஆம் திகதி கிராம அலுவலர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இந்நிலையில், வாக்கெடுப்பு நிலையங்களாகப் பயன்படுத்தப்படவுள்ள சில பாடசாலைகள் எதிர்வரும் 1 ஆம் திகதியில் இருந்து தேர்தல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

வாக்கெடுப்பு நிலையங்களாகப் பயன்படுத்தப்படவுள்ள பாடசாலைகளின் விடுமுறைகள் தொடர்பான விவரங்களையும் அந்தந்தப் பாடசாலைகளுக்குக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

# முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது!

புத்தளம், ஏப். 24

முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் ஐஸ் போதைப்பொருளுடன் நுரைச்சோலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுரைச்சோலை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் புத்தளம் , நுரைச்சோலை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் புத்தளம், கற்பிட்டி பிரதேசத்தில் வசிக்கும் 41 வயதுடையவர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து 7 நாட்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து மேலும் விசாரணைக்கு உட்படுத்த நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்று நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# காதி நீதிமன்ற நீதிபதிக்கு விளக்கமறியல்!

இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கெலிஓய பிரதேசத்தின் காதி நீதிமன்ற நீதிபதியை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் இன்று (24) உத்தரவிட்டுள்ளது.

குறித்த நீதிபதி விவாகரத்து தொடர்பான வழக்கு ஒன்றில் தீர்ப்பினை விரைவாக வழங்குவதற்காக 2 இலட்சம் ரூபாவை இலஞ்சமாக பெற்றபோது, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கடந்த 21ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்தேக நபர் இன்றையதினம் கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குனாவல முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் முன்வைத்த சமர்ப்பணங்களை பரிசீலித்த மேலதிக நீதவான், சந்தேக நபரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 52 தேர்தல் விதிமுறை மீறல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 24

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று வரை 52 தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பாக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவப் பிரிவினால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தா

# தேசபந்து தென்னக்கோன் விவகாரம்- ஆராய விசேட குழு!

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தனது பதவியை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அதனை அறிக்கையிடுவதற்கான விசாரணைக் குழு சபாநாயகரால் நியமிக்கப்பட்டது.

2002ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 05ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 3 (ஈ) மற்றும் 3(உ) பிரிவுகளிற்கு அமைய துர்நடத்தை மற்றும் பதவியின் தத்துவங்களைப் பாரதூரமான வகையில் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் பொலிஸ்மா அதிபர் ரி.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னக்கோனை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கு குறித்த சட்டத்தின் 5வது பிரிவுக்கு அமைய விசாரணைக் குழு அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் கடந்த 08ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதற்காக உயர்நீதிமன்ற நீதியரசர் பி.பி. சூரசேன தலைமையில் மூவரடங்கிய சிறப்பு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்புக்குழுவின் இணை உறுப்பினர்களாக நீதியரசர் (ஓய்வுநிலை) எம்.என்.பி.இத்தவெல மற்றும் தேசிய பொலிஸ் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் எம்.லலித் ஏக்கநாயக்க ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

குறித்த விசாரணைக் குழு நேற்றைய தினம் (23) நாடாளுமன்றத்தில் முதல் தடவையாகக் கூடிக் கலந்துரையாடியது. இக்குழு மீண்டும் நாளை 25ஆம் திகதி கூடவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பொதுமக்கள் கண்டி நகருக்கு வருவதை தவிர்க்குமாறு அறிவிப்பு!

*மறு அறிவித்தல் வரும் வரை ஸ்ரீ தலதா காட்சியைப் பார்வையிடுவதற்குகாக, கண்டிக்கு வருவதனை தவிர்க்குமாறு கண்டி மாவட்டச் செயலாளர் இந்திக உடவத்த அனைத்து பொது மக்களிடமும் கோரியுள்ளார்.*

*கண்டியில் 'ஸ்ரீ தலதா வழிபாடு' விழா இடம்பெற்று வரும் நிலையில் ஏற்கனவே அங்கு 300,000க்கும் மேற்பட்ட யாத்ரீகர்கள் கூடியிருப்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*யாத்ரீகர்கள் தொடர்ந்து கண்டி நகருக்குள் நுழைந்தால் சுகாதார பிரச்சினைகள் ஏற்படும் அபாயம் இருப்பதால் இந்தக் கோரிக்கை விடுக்கப்படுவதாகவும் கண்டி மாவட்டச் செயலாளர் சுட்டிக்காட்டினார்.*

*இதேவேளை, கண்டி வருவதனை தவிர்க்குமாறு பொலிஸாரும் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.*

*இது தொடர்பில் ஊடக சந்திப்பில் பேசிய மத்திய மாகாண மூத்த பொலிஸ் அதிபர் லலித் பத்திநாயக்க, ஸ்ரீ தலதா காட்சியைப் பார்வையிடுவதற்குகாக வரிசைகள் மிக நீளமாக இருப்பதால், ஒரு நாளைக்கு 100,000 பேரை அனுமதித்தாலும் தற்போதைய எண்ணிக்கையை குறைக்க, குறைந்தது மூன்று நாட்கள் செல்லும் என்று தெரிவித்துள்ளார்.*

*தற்போதுள்ள கூட்டத்தை கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலை காரணமாக, இராணுவம் அழைக்கப்பட்டுள்ளது.*

*எனவே தான் அடுத்த இரண்டு நாட்களுக்கு கண்டிக்கு பயணிக்க வேண்டாம் என அதிகாரிகள், பொதுமக்களை வலியுறுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.*







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08. Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.04.2025 ல் வெளியிடப்பெற்றது.